Tamil Nadu Pollution Control Board

**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY COVERING EXTENT OF 2.15.83 HA FOR THIRU. S.NANDAGOPAL IN S.F. NOS. 180/1, 181/3, IN IDAYARPALAYAM VILLAGE, SULUR TALUK, COIMBATORE DISTRICT AND Tmt. N. CHITRADEVI COVERING EXTENT OF 1.60.00 HA IN S.F. NO. 179/2(PART), IN IDAYARPALAYAM VILLAGE, SULUR TALUK, COIMBATORE DISTRICT AT M/S.SUYA UTHAVI KULU KOOTAMAIPU BUILDING IN PERIYA KUILI VILLAGE, PACHAPALAYAM PANCHAYAT COIMBATORE DISTRICT ON 03.12.2025 AT 10.00 A.M.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Tmt. R. Maruthippriya | : | **Revenue Divisional Officer,**<br>Coimbatore South,<br>Coimbatore District. |
| 2. | Dr. C.R. Sathish Kumar | : | **District Environmental Engineer,**<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 3. | Thiru. R. Senthil Kumar | | **Tahsildar,**<br>Sulur,<br>Coimbatore |
| 4. | Thiru. S. Senthil Kumar | : | **Assistant Environmental Engineer,**<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 5. | Dr. S. Suriya Kumar | : | EIA Consultant,<br>Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd,<br>Salem. |
| 6. | Public | : | 40 |

*****

The proposed M/s.S.Nandagopal and N.Chitradevi Rough Stone and Gravel Quarry Project at Idayarpalayam Village, Sulur Taluk, Coimbatore District has a total area of 3.75.85 hectares. The **Revenue Divisional Officer**, Tahsildar of Sulur, the public to attend public hearing and the quarry owners were welcomed by the District Environmental Engineer, TNPCB Coimbatore South According to the 2006 Environmental Impact Assessment Notification of the Union Ministry of Environment, Forest and Climate Change, GOI it is necessary to obtain prior environmental clearance for 8 types of industries, and while obtaining such prior environmental clearance, it is a rule to obtain the views of the public and record it and submit the same to the State Environmental Impact Assessment Authority. Accordingly, he informed that the details of this public hearing had already been published in the Tamil and English dailies, Thinamalar and The New Indian Express on 28.10.2025 and the Environmental Impact Assessment Report and Project Summary were placed for public viewing at the necessary offices. Further, the information about this meeting has been announced through Flex boards at two prominent places in the village and handouts have been distributed to the public. The photographs of which are shown here.

He further informed that on behalf of the quarry owners, the project consultant will explain the details of ordinary stone and gravel quarry to the public and after that, the public will be asked to register their views regarding the project. All this audio and video recording of proceedings will be submitted to the Tamil Nadu State Environmental Impact Assessment Authority.

The Revenue Divisional Officer inaugurated the public consultation meeting and said that the purpose of the meeting is to record the environmental comments raised by the public. Later, the project consultant of the ordinary stone and gravel quarry project gave a presentation on the proposed ordinary stone and gravel quarries.

Following this, the Environmental Impact Assessment Consultant of the Rough Stone and Gravel Quarry, Dr.S.Suriya kumar, EIA Consultant, Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd Salem, has welcomed everyone and gave a detailed explanation through a video

presentation about the proposed ordinary stone and gravel quarry and the environmental management plan to be implemented during its implementation.

Then, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South, said that the public's comments on the rough stone and gravel quarry project, which was currently being explained in detail through a video presentation, can be recorded and also, they will be recorded on the video as well.

Accordingly, the public recorded their following comments and suggestions are below.

**1.Mr. Sathya Narayanan, Ponnanganni:**

I come from Ponnanganni. My village is one kilometer away from where this quarry is located. my name is Sathya Narayanan. Mr. Nandagopal and Chitradevi have established a quarry for many years and have improved our livelihood. Normally, starting a company means that only educated people get jobs. In a village like this, all of us, my parents, siblings, and relatives are illiterate, so it is a good opportunity to work in a quarry like this. Till now, this village has been dependent on the quarry of Mr. Nandagopal and Chitradevi. This is our livelihood. Only if we go to work every day can our family survive. They take great care of our family. If our family needs anything, they come at the right time to help with studies, even if the children are not well, they take out insurance policies and give education loans, and so on. If an IT company or a manufacturing company comes, only educated people get maximum jobs. Our boys also have a job at weigh bridge in that administration or to write budgets and accounts, which is very useful for us because there are such quarries. Also, they are doing a good job by using explosives in a way that does not harm the environment in any way, and there is no harm to any house, goat, or cow farm. They have also planted many trees and done pollution control. Mr. Nandagopal and Chitradevi are doing many donations and social services through their quarry. For example, they built a shed for the school located in our village. Also, they built a control tower room, parking area and a special platform for parking vehicles at the Sulur police station. They are working for the welfare of every worker, not only for profit but also for social service. Especially if a quarry unit is coming, pollution is the most important reason. They have built a shed to avoid air pollution.

Many people from this village are working as drivers. So, our Ponnanganni village is getting a lot of benefits from this quarry of Mr. Nandagopal and Chitradevi. Apart from this, they are also earning good income for the government. Generally, if a country wants to prosper, every village should prosper well. Coimbatore city should is developing very well. They say that a metro station is coming, they say that an IT hub is coming, and there is a lot of basic need for road facilities in this area. For many such basic facilities, this stone, M SAND, P SAND, all these are required. For this, when you give them a no objection certificate, there is no doubt that this Coimbatore city will develop further by giving a lot of output. When they are given an opportunity like this, the government's income and our livelihood will increase. SO, there is no objection on behalf of our village. I kindly request you to give it immediately. Thank you.

**2.Mrs. Prasanna**:

This quarry is very helpful to us because it is here. They have given many job vacancies. They have also made many donations to the temple and schools in our village. They have given us a lot of material and helped us. In addition, when they take the material, they put a tar mat on it and close it properly so that dust does not fly. Please grant permission for the quarry. Thank you.

**3.Mr. Loganathan**:

My name is Loganathan. I am running a truck nearby and our business is running because of their existence. If they are not there, we have to go far away to get material. The cost of diesel is very high. If you give permission to them, then the drivers who are nearby, will get benefited. That is our livelihood too, and we are relying on this and we educate all our children. The future of the children depends on them. That is why I have no objection to giving permission to them. Thank you.

**4.Mr. Selvakumar, Ponnanganni:**

He greeted everyone. My name is Selvakumar. I come from Ponnanganni. My house is nearby this quarry. I have 2 trucks. I take all the material from this quarry. This quarry is near me; it is easy to get material. I have no objection to giving him a license.

**5.Mr. Hariharan, Bogampatti:**

My name is Hariharan. I am from Bogampatti which is nearby this quarry. I have no objection to giving them a license. They help us a lot and there is no problem. Also, if we ask for material for the houses, they give it. So there is no problem. If we ask for a JCB to make a pond for the garden, to dig a pit for coconut trees, they give us all the help we need. There is no problem nearby. Thank you

**6.Mr. Ganesh, Bogampatti:**

He greeted everyone, my house is nearby in Bogampatti. We are next to this crusher. Whatever donation is asked for by the Panchayat, Temple, School, they give it to us. We have been taking material from them for 2-3 years. Even if the money is less, they give it, so we have no problem. 2-3 years ago, there was a water shortage due to lack of rain. At that time, they gave free water for 2-3 months, and they also help a lot when we ask the temples. We have no problem in getting licenses. It is very good for the village. Thank you.

**7.Mr. Ranjith, Bogampatti:**

My name is Ranjith. I come from Bogampatti. It is just half a kilometer away from the crusher. Our entire economy is based on this crusher. My family depends on this crusher. Our children study only from this crusher, so we have no objection to this. Our livelihood depends on this quarry. Thank you.

**8.Mrs. Jebakani, Ramanathapuram:**

My name is Jebakani. I come from Ramanathapuram District. I have been working as a volunteer in a charity organization for many years. First of all, I would like to express my

gratitude to everyone who attended the stone quarry consultation meeting, as well as the Revenue Divisional Officer and the District Environmental Engineer, and I would like to put forward these views. This stone quarry is something that can improve the livelihood of the people. If it improves the livelihood of the people for those who they need educational facilities. This quarry company is taking care of various things like providing drinking water and road facilities, employment opportunities for them, attending this establishment during their special time, providing medical facilities for their emergency needs. My Opinion is, I would like to kindly request you to give a no-objection certificate to this quarry. Thank you.

**9.Mr. Vivek Kumar, Malumichampatti:**

Greetings. I am Vivek Kumar from Malumichampatti. We have a road construction company. Due to material shortage, the work is going slowly now, if you give approval for this quarry, we will get material soon and so we can complete the road work soon. Not only that, but also the local people will get employment there, So, my opinion is that permission may be given.

**District Environmental Engineer**:

The details of person, who attended the above public hearing the public's views expressed in the meeting, the recorded video proceedings of meeting along with photographs will be submitted to the SEIAA.

At the end of the meeting, the District Environmental Engineer thanked the Revenue Divisional Officer who chaired the public hearing meeting and all the public and all the officials.

**No. of Petition received: 1**

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Coimbatore South.**

**Revenue Divisional Officer,**
**Coimbatore South,**
**Coimbatore District**

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், **இடையர்பாளையம்** கிராமத்தில் க.ச.எண். 180/1, 181/3 ல், பரப்பளவு 2.15.83 ஹெக்டர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். S.நந்தகோபால் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி மற்றும் க.ச. எண் : 179/2 (PART) ல் பரப்பளவு 1.60.00 ஹெக்டர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். N.சித்ராதேவி அவர்களின் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து கோயம்புத்தூர் மாவட்டம், பச்சாபாளையம் ஊராட்சி, பெரியகுயிலி கிராமத்திலுள்ள சுய உதவிக்குழு கூட்டமைப்பு கட்டிடத்தில் 03.12.2025 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.

**பங்கேற்றோர் :**

| | | |
|---|---|---|
| 1 | திருமதி.R.மாருதிப்பிரியா | வருவாய் கோட்டாட்சியர்<br>கோயம்புத்தூர் தெற்கு<br>கோயம்புத்தூர் மாவட்டம் |
| 2. | முனைவர்.C R சதிஷ்குமார் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>கோயம்புத்தூர் தெற்கு |
| 3. | திரு.R.செந்தில்குமார் | வட்டாட்சியர்,<br>சூலூர்,<br>கோயம்புத்தூர் மாவட்டம். |
| 4. | திரு.S.செந்தில்குமார் | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>கோயம்புத்தூர் தெற்கு |
| 5. | முனைவர்.சே.சூரியக்குமார் | திட்ட ஆலோசகர்,<br>Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd<br>சேலம் |
| 6. | பொதுமக்கள் எண்ணிக்கை | 40 |

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், **இடையர்பாளையம்** கிராமத்தில் க.ச.எண். 180/1, 181/3 ல், பரப்பளவு 2.15.83 ஹெக்டர், மற்றும் புல எண் : 179/2 ல் பரப்பளவு 1.60.00 ஹெக்டர் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திருவாளர்கள்.S.நந்தகோபால், N.சித்ராதேவி அவர்களின் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் மொத்த பரப்பளவு 3.75.83 ஹெக்டர்ஸ் ஆகும். இக்குவாரி திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள வருவாய் கோட்டாட்சியர் அவர்களையும், வட்டாட்சியர் அவர்களையும், பொதுமக்களையும் மற்றும் குவாரி உரிமையாளர்களையும், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு அலுவலக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 2006 ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் படி 8 வகையான தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பது அவசியம் என்றும், அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும் போது பொது மக்களின் கருத்துக்களை கேட்டு அதை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்பது விதியாகும். அதன்படி இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களான முறையே தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமலர் ஆகிய நாளிதழ்களில் 28.10.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததையும் மற்றும் தேவையான அலுவலகங்களில் பொது மக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் வைக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தார். மேலும், இந்த கூட்டம் நடைபெறவுள்ள தகவலை கிராமத்திலுள்ள முக்கியமான இரண்டு இடங்களில் விளம்பர பலகை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது மக்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனுடைய புகைப்படங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடர்பாக குவாரி உரிமையாளர்களின் சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் சாதாரணக் கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்க உரை பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும் அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்களை பதிவு செய்யுமாறும் இவை அனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார் அவர் பொதுமக்கள் எடுத்துரைக்கும் சுற்றுச்சூழல் சம்பந்தமான கருத்துக்களை பதிவு செய்வது கூட்டத்தின் நோக்கம் என்று கூறினார். பின்னர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் திட்ட ஆலோசகரால் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிகள் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

அதனை தொடர்ந்து சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர் முனைவர்.சே.சூரியக்குமார் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்க காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனவும் அவை வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் கூறினார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை பதிவு செய்தனர் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**1.திரு. சத்தியநாராயணன், பொன்னாங்கண்ணி :**

நான் பொன்னாங்கண்ணியிலிருந்து வருகிறேன். இந்த குவாரி அமைந்துள்ள இடத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது எனது கிராமம். எனது பெயர் சத்தியநாராயணன் திரு.நந்தகோபால், சித்ராதேவி அவர்கள் பல வருட காலமாக குவாரி அமைத்து எங்களுக்கு வாழ்வாதாரத்தை மிகவும் மேம்படுத்தி உள்ளார்கள். பொதுவாக ஒரு கம்பெனி ஆரம்பிப்பது என்றால் படித்தவர்களுக்கே வேலை கிடைக்கும். இது போன்ற கிராமத்தில் இருக்கும் நாங்கள் எல்லாம் எனது பெற்றோர், உடன்பிறந்தவர்கள் உறவினர்கள் எல்லோரும் படிக்காதவர்கள் என்னும் போது இதுபோன்ற குவாரியில் வேலை செய்ய ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. இதுவரை இந்த கிராமம் திரு. நந்தகோபால், சித்ராதேவி

அவர்களின் குவாரியை நம்பி தான் இருக்கிறது. எங்களது வாழ்வாதாரமே இதுதான். தினமும் கூலி வேலைக்கு சென்று வந்தால் தான் எங்களுடைய குடும்பமே நடக்கும். அவர்கள் எங்கள் குடும்பத்தாரை மிகவும் பார்த்துக்கொள்கிறார்கள். எங்கள் குடும்பத்திற்கு ஏதாவது தேவை என்றால் படிப்பு உதவி, குழந்தைகளுக்கு உடல் சரி இல்லை என்றாலும் தக்க தருணத்தில் வந்து இன்சூரன்ஸ் பாலிசி எடுத்து கல்விக்கடன் மாதிரி கொடுத்து இப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள், ஒரு ஐடி கம்பெனியோ அல்லது ஒரு மேனுபாக்சரிங் கம்பெனியோ வந்தால் படித்தவர்களுக்கே அதிகப்படியான வேலை கிடைக்கும். எங்களது பையன்களும் அந்த நிர்வாகத்தில் weigh bridge க்கோ அல்லது வரவு செலவு கணக்கு, அக்கவுண்ட்ஸ் எழுதுவதற்கு இதுபோன்ற குவாரிகள் அமைந்துள்ளதால் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. மேலும் அவர்கள் சுற்றுச்சூழல் எந்த வகையிலும் கெடாத வகையில் வெடிமருந்து வைத்து வெடிக்க வைப்பதன் மூலமும் எந்த ஒரு வீடும் ஆடு, மாடு பண்ணை இதற்கு எந்த ஒரு சேதாரமும் இல்லாமல் சிறப்பாக செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். மேலும் பல மரங்கள் நட்டு மாசு கட்டுப்பாட்டை செய்து இருக்கிறார்கள். திரு.நந்தகோபால், சித்ராதேவி அவர்களின் குவாரி மூலமாக பல நன்கொடைகளும் சமூக சேவையாகவும் செய்து கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக எங்கள் ஊரில் அமைந்துள்ள பள்ளிக்கு ஒரு ஷெட் அமைத்துக்கொடுத்தார்கள். மேலும், சூலூர் காவல் நிலையத்தில் கண்ட்ரோல் டவர் ரூம், பார்க்கிங் ஏரியா மற்றும் வாகனங்கள் நிறுத்துவதற்கு ஒரு சிறப்பான மேடை அமைத்து கொடுத்தார்கள். லாப நோக்கம் மட்டுமன்றி இதுபோல் சமூக சேவையிலும் தங்களை ஈடுபடுத்தி ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவர்கள் நலன் கருதி செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக ஒரு குவாரி கிரஷர் யூனிட் வருகிறது என்றால் பொல்யூசன் தான் மிக முக்கியமான காரணமாக அமையும். இவர்கள் ஷெட் முழுக்க அமைத்து சிறிதளவு காற்று கூட வெளியே போகாத வண்ணம் செய்திருக்கிறார்கள். இந்த கிராமத்திலிருந்து நிறைய பேர் ஓட்டுநர்களாக பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆக எங்களுடைய இந்த பொன்னாங்கண்ணி கிராமம் திரு.நந்தகோபால், சித்ராதேவி அவர்களின் இந்த குவாரி அமைப்பால் நிறைய நலன் பெற்று வருகிறது. இது மட்டுமல்லாமல் அரசாங்கத்திற்கும் சிறப்பான வருவாய் கிடைத்துக்கொண்டிருக்கிறது. பொதுவாக ஒரு நாடு வளம் பெற வேண்டுமென்றால் ஒவ்வொரு கிராமமும் சிறப்பாக வளம் பெறவேண்டும். இன்னும் கோயம்புத்தூர் மாநகரம் மிகசிறப்பாக வளரவேண்டும். மெட்ரோ ஸ்டேஷன் வருகிறது என்கிறார்கள் ஐ.டி.ஹப் வருகிறது என்கிறார்கள் இதற்கெல்லாம் அடிப்படை தேவை நிறைய சாலை வசதி

வேண்டும். இது போன்ற பல அடிப்படை வசதிகளுக்கு இந்த கல், M SAND , P SAND இதெல்லாம் தேவைப்படுகிறது. இதற்கு இது போன்று நீங்கள் அவர்களுக்கு No Objection Certificate From Pollution கொடுக்கும் பொழுது அரசாங்கம் அவர்களுக்கு உரிமம் கொடுக்கும் போதும் இதுபோல் செயல்படுவதால் நிறைய OUTPUT கொடுத்து இந்த கோயம்புத்தூர் நகரம் மேலும் வளர்ச்சி அடையும் என்பதில் ஐயமில்லை. இப்படி இவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கும் போது அரசாங்கத்தின் வருவாயும் நேரடி வருவாயும் அதிகமாகும். எனவே, எங்கள் கிராமத்தின் சார்பாக எந்த ஒரு Objectionum இல்லை. நீங்கள் உடனடியாக தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

**2.திருமதி. பிரசன்னா :**

இந்த கல்குவாரி இங்கே இருப்பதனால் எங்களுக்கு நிறைய உதவியாக இருக்கிறது. நிறைய வேலை வாய்ப்பு கொடுத்து இருக்கிறார்கள். எங்கள் ஊரில் இருக்கும் கோவிலுக்கு, பள்ளிகளுக்கு எல்லாம் நிறைய நன்கொடை கொடுத்து இருக்கிறார்கள். நிறைய மெட்டீரியலெல்லாம் கொடுத்து உதவி செய்து இருக்கிறார்கள் மற்றும் மெட்டீரியல் எடுத்துக்கொண்டு போகும் போது சரியாக தார்பாய் போட்டு மூடி தூசிகள் பறக்காமல் கொண்டு போய்க்கொண்டு இருக்கிறார்கள். குவாரிக்கு அனுமதி வழங்குங்கள். நன்றி.

**3.திரு. லோகநாதன்:**

என் பெயர் லோகநாதன். நான் பக்கத்தில் தான் லாரி வைத்து தொழில் செய்துகொண்டு இருக்கிறேன். இவர்கள் பக்கத்தில் இருப்பதினால் தான் எங்கள் தொழில் நடந்து கொண்டு இருக்கிறது. இவர்கள் இல்லை என்றால் ரொம்ப தூரம் தள்ளி போய் தான் நாங்கள் மெட்டீரியல் எடுக்க வேண்டி இருக்கிறது. டீசல் செலவு ரொம்ப அதிகமாக இருக்கிறது. இவர்களுக்கு நீங்கள் அனுமதி கொடுக்கும் போது அங்கு பக்கத்தில் இருக்கக்கூடிய டிரைவர்கள், அதில் வேலை செய்யும் ஆட்கள் எல்லோருக்கும் வாழ்வாதாரம் அதுதான். எங்களுடைய வாழ்வாதாரமும் அதுதான் இதை நம்பித்தான் நாங்கள் எங்களுடைய குழந்தைகளையெல்லாம் படிக்க வைக்கிறோம். குழந்தைகளின் எதிர்காலம் அவர்களை நம்பித்தான் இருக்கிறது. அதனால் அவர்களுக்கு அனுமதி கொடுப்பதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. கொடுத்தால் தான் எங்களுடைய வாழ்வாதாரம் எப்போதுமே நல்லா இருக்கும். நன்றி.

**4.திரு. செல்வகுமார், பொன்னாங்கண்ணி:**

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் செல்வகுமார். பொன்னாங்கண்ணியிலிருந்து வருகிறேன். சாரோட கம்பெனி பக்கத்தில் தான் என் வீடு இருக்கிறது. நான் 2 லாரி வைத்திருக்கிறேன். மெட்டீரியலெல்லாம் சாரிடம் தான் எடுத்துக்கொண்டு இருக்கிறேன். அவருடைய கம்பெனி எனக்கு அருகில் இருப்பதினால் மெட்டீரியல் எடுப்பதற்கு சுலபமாக இருக்கிறது. இவருக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு ஆட்சேபனை இல்லை.

**5.திரு. ஹரிஹரன், போகம்பட்டி:**

என் பெயர் ஹரிஹரன். நான் அங்கு பக்கத்தில் இருக்கும் போகம்பட்டியில் இருக்கிறேன். இவர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. எங்களுக்கு நிறைய உதவிகள் செய்கிறார் எந்த பிரச்சனையும் இல்லை. அதுபோக, வீடுகளுக்கு மெட்டீரியல் கேட்டால் கொடுக்கிறார்கள். அதனால் எந்த பிரச்சனையும் இல்லை. ஜேசிபி கேட்டால் தருகிறார்கள் தோட்டத்திற்கு ஏரி போடுவதற்கு, தென்னம்பிள்ளை குழி எடுப்பதற்கு எங்களுக்கு எல்லா உதவிகளும் செய்து கொண்டு இருக்கிறார்கள். பக்கத்தில் எந்த பிரச்சனையும் இல்லை. எந்த ஆட்சேபணையும் இல்லை. நன்றி.

**6.திரு. கணேஷ், போகம்பட்டி:**

வணக்கம் சார், வணக்கம் மேடம், பக்கத்தில் போகம்பட்டியில் தான் என் வீடு இருக்கிறது. சார் கிரஷர் பக்கத்தில் தான் நாங்கள் இருக்கிறோம். பஞ்சாபத்திற்கு, கோவிலுக்கு, பள்ளிகளுக்கு எந்த நன்கொடை கேட்டாலும், எதுகேட்டாலும் செய்து தருகிறார்கள். நாங்கள் 2, 3 வருடமாக அவர்களிடம் மெட்டீரியல் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். பணம் குறைவாக இருந்தாலும் தருகிறார்கள், அதனால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. 2, 3 வருடத்திற்கு முன்னால் மழை இல்லாமல் தண்ணீர் கஷ்டம் அப்போது 2, 3 மாதம் தண்ணீர் இலவசமாகவே கொடுத்தார்கள், அதுபோக கோவில்களுக்கெல்லாம் கேட்கும் போது நிறைய உதவிகள் செய்கிறார்கள். லைசென்ஸ் தருவதில் எங்களுக்கு எந்த விதமான பிரச்சனையும் இல்லை. ஊருக்கு ரொம்ப நல்லது தான். நன்றி.

**7.திரு. ரஞ்சித், போகம்பட்டி:**

என்னுடைய பெயர் ரஞ்சித். போகம்பட்டியிலிருந்து வருகிறேன். இந்த கிரஷர் பக்கத்தில் தான் அரை கிலோ மீட்டரில் தான் இருக்கிறது. இந்த கிரஷரினால் தான் எங்களுடைய பொருளாதாரமே இருக்கிறது. என் குடும்பம் இந்த கிரஷரை சார்ந்து இருக்கிறது. எங்கள் குழந்தைகள் படிப்பது எல்லாமே இந்த கிரஷரினால் தான் இதனால் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. எங்களுடைய வாழ்வாதாரமே இந்த கல்குவாரியை நம்பித்தான் இருக்கிறது. நன்றி. வணக்கம்.

**8.திருமதி. ஜெபகனி, ராமநாதபுரம்:**

என்னுடைய பெயர் ஜெபகனி ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து வந்திருக்கிறேன். நான் தொண்டு நிறுவனத்தில் பல ஆண்டுகளாக தன்னார்வலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த கல் குவாரி கருத்துகேட்பு கூட்டத்திற்கு வருகை தந்த அனைவருக்கும் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும் மற்றும் சுற்றுச்சூழல் அதிகாரி அவர்களுக்கும் முதலில் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு இந்த கருத்துக்களை நான் முன் வைக்கிறேன். இந்த கல் குவாரி என்பது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தக்கூடிய ஒரு விஷயம். மக்களுக்கு எப்படி வாழ்வாதாரத்தை உயர்த்துகிறது என்றால் படிப்பு வசதி அவர்களுக்கு தேவைப்படுகிறது. குடிநீர் வசதி மற்றும் சாலை வசதி, அவர்களுக்கு வேலைவாய்ப்பு, அவர்களின் விஷேச காலத்தில் இந்த நிறுவனம்/ போய் கலந்து கொள்வது, அவர்களுக்கு அவசர தேவைகளுக்கு மருத்துவ வசதி செய்து கொடுப்பது இப்படி பலவகையான விஷயங்களெல்லாம் இந்த கல் குவாரி நிறுவனம் செய்து கொண்டு இருக்கிறார்கள். என்னுடைய கருத்து என்னவென்று கேட்டால் இந்த கல் குவாரிக்கு தடைஇல்லாத சான்று கொடுக்கும் படி அன்போடு கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**9.திரு. விவேக்குமார், மலுமிச்சம்பட்டி:**

வணக்கம். நான் மலுமிச்சம்பட்டியிலிருந்து விவேக்குமார். நாங்கள் ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி வைத்திருக்கிறோம். மெட்டீரியல் குறைபாட்டினால் இப்போது வேலை மெதுவாக நடக்கிறது, இந்த மாதிரி குவாரிக்கு அனுமதி கொடுத்தீர்களானால் எங்களுக்கு மெட்டீரியல் சீக்கிரம் கிடைக்கும் அதனால் எங்களுக்கு ரோடு வேலையும்

சீக்கிரம் முடிக்க முடியும். அதுமட்டுமில்லாமல் அங்கு உள்ளூரில் இருப்பவர்களுக்கு வேலையும் கிடைப்பதினால் அனுமதி கொடுக்கலாம் என்பது என்னுடைய கருத்து.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**:

இங்கு கருத்துக்களை பதிவு செய்த அனைத்து பொதுமக்களுக்கும் எங்களது நன்றி. மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல் ஆகியவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படும்.

கூட்ட முடிவில் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்கள் இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி கொடுத்த மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் மற்றும் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்த பொது மக்கள் அனைவருக்கும் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கூட்டத்தை இனிதே முடிக்கப்படுகிறது. நன்றி வணக்கம். எனஅனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**மனுக்களின் எண்ணிக்கை : 1**

18/12/25

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**கோயம்புத்தூர் தெற்கு.**

18/12/25

**வருவாய் கோட்டாட்சியர்,**
**கோயம்புத்தூர் தெற்கு,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**